**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**செ.வெ. எண்.02** **நாள். 13.03.2019**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இயங்கும் ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழுவால் சான்றளிக்கப்பட்ட விளம்பரங்களை மட்டுமே ஊடகங்கள் வெளியிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள 2019 பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் பெரம்பூர் சட்டன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களின் விளம்பரங்களுக்கு அனுமதி வழங்கிடவும், நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் தேர்தல் குறித்த செய்திகள், விதிமீறல்கள் ஆகியவற்றை கண்டறியவும் மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழுவால் சான்றளிக்கப்பட்ட விளம்பரங்களை ஊடகங்கள் வெளியிடுவது தொடர்பாக ஊடக நிறுவனங்களை சார்ந்தவர்களுடனான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் இன்று (13.03.2019) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இக்குழுவில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், அகில இந்திய வானொலி நிலைய உதவி இயக்குநர் (செய்தி) திரு.எம்.ஜெயசிங் அவர்கள், தமிழ்நாடு மின்னணு நிறுவன (ELCOT) துணை மேலாளர் திருமதி வி.பூங்குழலி அவர்கள், தினமணி நாளிதழ் மூத்த பத்திரிகையாளர் திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் உறுப்பினராகவும், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.இராமகிருஷ்ணன் உறுப்பினர் செயலராகவும், இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.உமாபதி அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது : இந்திய தேர்தல் ஆணையம் ஜனநாயகத்தை காப்பதில் ஊடகங்கள் ஆற்றும் பங்கினை பெரிதும் பாராட்டுகிறது. அண்மைக்காலங்களில் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது கடுமையான தேர்தல் முறைகேடாக உருவெடுத்துள்ளது. இது நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு இடையூறாகும். இது தேர்தல் செலவின வரம்புகளை மீறும் செயலாகும்.

ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு (Media Certification and Monitoring Committee) உறுப்பினர்கள் மூலம் வழங்கப்பட்ட சான்று எண்ணுடன் கூடிய தேர்தல் விளம்பரங்கள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் காட்சிகளை மட்டுமே ஊடகங்கள் வெளியிட வேண்டும். ஊடகச்

சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் அனுமதியில்லாத தேர்தல் விளம்பரங்களை எக்காரணம் கொண்டும் நாளிதழ்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் வெளியிடவோ / ஒளிபரப்பவோ கூடாது. சட்டத்திற்கு ஒத்திசைவாக இல்லாததும் ஒழுக்கம் மற்றும் கண்ணியத்தை பாதிப்பதும், உணர்ச்சியை தூண்டக்கூடியதும் அல்லது அதிர்ச்சி தரக்கூடிய, வெறுப்பு மற்றும் புரட்சியை தூண்டுகிற விளம்பரங்களை நாளிதழ்களோ, தொலைக்காட்சிகளோ வெளியிடவோ, ஒளிபரப்பவோ கூடாது.

ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளாக இனம் காணும் அனைத்து செய்திகளும் சம்மந்தப்பட்ட வேட்பாளரின் செலவினக் கணக்கில் சேர்ப்பதற்காக தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரிவிக்கப்படும். வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் தகவல்கள் மற்றும் பிரச்சாரங்கள் வேட்பாளர்களின் தேர்தல் கணக்கில் சேர்க்கப்படும். நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சியினர் நேரடியாக தேர்தல் குறித்த விளம்பரங்கள் மற்றும் செய்திகளை வெளியிட அனுமதிகோரி விண்ணப்பிக்கக்கூடாது.

ஊடகங்கள், குறிப்பிட்ட சில வேட்பாளர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்யும் செய்திகளை மீண்டும் மீண்டும் வெளியிடுதல், குறிப்பிட்ட வேட்பாளர், சமூகத்தில் ஒவ்வொரு பிரிவினரிடமும் ஆதரவு பெற்றுள்ளார் என்றும், அவர்தான் தொகுதியில் வெற்றி பெறுவார் என்றும் வரும் செய்திகள், ஒரே வேட்பாளரை குறித்து அவரது வெற்றி வாய்ப்பை பெரிதாக கூறி மீண்டும் மீண்டும் பேசுவது போன்ற செய்திகள் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளாக (Paid News) கருதப்படும்.

வேட்பாளர்கள் ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் அனுமதி பெற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் இரண்டு நாட்களுக்கு முன்பாகவும், சுயேட்சைகள் மூன்று நாட்களுக்கு மூன்பாகவும் விண்ணப்பிக்க வேண்டும். விளம்பரங்கள் தனிப்பட்ட பிற நபரையோ, கட்சியினையோ குறித்து விமர்சனங்கள் செய்யக்கூடாது. பிற வேட்பாளர்களின் தனிப்பட்ட வாழ்க்கை முறையினை விமர்சிக்கக்கூடாது. விளம்பரங்கள் இந்திய இறையாண்மைக்கு எதிராகவோ, வன்முறையை தூண்டும் விதமாகவோ (சாதி, மத, இன) இருக்கக்கூடாது. விளம்பரம் தயாரிப்பதற்கு செலவிடப்பட்ட கட்டணத்துடன் அதன் அளவு, எண்ணிக்கை உட்பட இதர வகை செலவினப் பட்டியுடன் விண்ணப்பிக்க வேண்டும். விளம்பரத்திற்கான கட்டணம் அரசு நிர்ணயத்துள்ள கட்டணங்களின் படி கணக்கீடு செய்யப்படும். அதன் விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

விளம்பரங்கள் அச்சிடப்படும் அல்லது வடிவமைக்கப்படும் அச்சகத்தின் பெயருடன் அச்சிடப்பட வேண்டும். விளம்பரத்தில் ஏதேனும் மாற்றம் செய்யக் கோரினால் உடனடியாக மாற்றம் செய்து வழங்கிட வேண்டும். அனுமதி பெற்ற / அனுமதிக்கப்பட்ட விளம்பரத்தினை மட்டுமே அச்சிடவோ, ஒளிபரப்பவோ

வேண்டும். அனுமதி பெற்ற எண்ணை விளம்பரத்தில் கண்டிப்பாக எளிதாக தெரியும் வண்ணம் இடம்பெற செய்ய வேண்டும். அனுமதிகோரும் விண்ணப்பத்துடன் விளம்பர வடிவமைப்பு/வீடியோ ஆகியவற்றை இணைக்க வேண்டும். விளம்பரங்களில் இடம்பெற வேண்டிய வாசகங்கள், காட்சிகள் மற்றும் பாடல்வரிகளை அச்சுவடிவில் விண்ணப்பத்துடன் வழங்க வேண்டும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி இணையதள முகவரியான www.chennaicorporation.gov.in-லிருந்தும் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் இயங்கும் அனைத்து அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 127ஏ–ன் கீழ் தேர்தல் தொடர்பான துண்டு பிரசுரங்கள் அச்சிடுவது மீதான இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடுகள் குறித்த அறிவுரைகள் உள்ளன. இதன்படி, மேற்கண்ட துண்டு பிரசுரத்தில் அச்சகத்தார் மற்றும் பதிப்பாளரின் பெயர், முகவரி இடம் பெற்றிருக்க வேண்டும். படிவம் ஏ மற்றும் பி–ல் உள்ள விவரங்களை பூர்த்தி செய்வதுடன், படிவம் ஏ–இல் அச்சகத்தார் மற்றும் பதிப்பாளரின் கையொப்பமிட்டு, அதனை இரு நபர்கள் சான்றொப்பம் அளிக்க வேண்டும்.

மேலும், சென்னையில் உள்ள அச்சகத்தில் தேர்தல் தொடர்பாக பிரசுரிக்கப்படுவதன் ஒரு பிரதியை பாராளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையை தற்போது நடைபெற உள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலின்போது கடைப்பிடிக்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், ஊடக நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**